புதன்பெய்கை

Registered as a Newspaper

உதயன்

சுடர் : 41
கதிர் : 140

புதன்கிழமை
15 ஏப்ரல் 2026

சித்திரை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50




# அரசாங்கத்தை அசைக்க எதிரணிகளால் முடியாது!

## சதிகளை முறியடிப்போம் என பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்ரல் 15**

**அரசாங்கத்தைக் கவிழ்க்கலாம் என்று எதிர்க்கட்சிகள் கனவு காண்கின்றன. அவர்களின் அனைத்துச் சதிகளையும் நாங்கள் முறியடிப்போம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

»15



## யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 15
அன்னை பூபதிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றையதினம் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர் தாயகத்தில் அமைதிப்படை எனும் போர்வையில் உள் நுழைந்த

»15



## தேரேறி வந்தார் மருதடி விநாயகர்

யாழ்ப்பாணம், ஏப். 15
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. அதிகாலை அபிஷேக வழிபாடுகளைத் தொடர்ந்து,

»15

## அல்லைப்பிட்டியில் என்புச் சிதிலங்கள்!

### பொலிஸார் தீவிர விசாரணை



யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணம் - வேலணை, அல்லைப்பிட்டிப் பகுதியில், பற்றைக் காணியொன்றுக்குள் இருந்து மனித என்புத் தொகுதியொன்று உக்கிச் சிதிலமடைந்த நிலையில் மீட்கப்

»15

### போதைப்பொருள்களுடன்

## 24 மணிநேரத்தில் 520 பேர் கைது!

கொழும்பு, ஏப். 15
போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நாடெங்கும் கடந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது 520 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப் பட்டவர்களிடம்

»15

### ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்காக

## ஏப்ரல் 19ஆம் திகதி விசேட பிரார்த்தனை!

விரிவு பக்கம்:- 06

### மின்னல் தாக்கம் தொடர்பில்

## வடமாகாணத்துக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 15
வடக்கு மாகாணத்தில் மின்னல் தாக்கத்தின் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:- வடக்கு, மேல், சப்ரகமுவ,

»15



## புத்தாண்டு வாரத்தில் எகிறும் விபத்துகள்

### கடந்த ஒருசில நாள்களுக்குள் 29,000 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஏப். 15
புத்தாண்டு வாரத்தில் விபத்துகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று, மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. விபத்துத் தடுப்புப் பிரிவின் சமூகநல மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- புத்தாண்டு வாரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்

»15



“வருசம் பிறந்தாலே வாகனங்கள் ‘தண்ணியில’ பறந்தால் அக்சிடெண்ட் வரத்தானே செய்யும்”

## புலிகளின் ஆயுதங்கள்; அகழ்வுப்பணி தோல்வி

விரிவு பக்கம்:- 03

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை எதிர்கொள்ள அனைவரும் கைகோர்ப்போம்

## ஜனாதிபதி அநுர அழைப்பு



கொழும்பு, ஏப்.15

எழுந்துள்ள சவால்களைத் துணிவுடன் எதிர்கொண்டு, வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் இலக்கை அனைவருக்கும் உரித்தாக்குவதற்குச் சகோதரத்துவத்துடன் கைகோர்ப்போம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மலர்ந்துள்ள பராபவ சித்திரைப் புத்தாண்டுக்கான தமது வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பௌதிக ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் புதுமைபெறும் எதிர்பார்ப்பை அடையாளப்படுத்தும் சித்திரைப் புத்தாண்டு, இந்நாட்டு மக்களின் பிரதான கலாசார விழாவாகும். பாரம்பரிய சம்பிரதாயங்களைப் பாதுகாத்து, சுபங்களுக்கும் சமயக் கிரியைகளுக் கும் முன்னுரிமை அளித்து, அனைவரும் ஒன்றிணைந்து ஒரே சுபவேளையில் செயற்படுவது இந்தப் புத்தாண்டின் சிறப்பம்சமாகும்.

கடந்தவருடம் நாம் எதிர்கொண்ட மிகப்பெரிய இயற்கை அனர்த்தச் சவால்களின் போது உலகிற்கு வெளிப்படுத்திய எமது உள்வாங்கும் திறன் மற்றும் சகிப்புத்தன்மையைப் போலவே, மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள வெளிப்புறச் சவால்களையும் திட்டமிட்ட முறையான முகாமைத்துவத்துடன் வெற்றிகொள்வதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை அரசாங்கம் தற்போது நடைமுறைப் படுத்தியுள்ளது.

ஒரு நாடாக ஒன்றிணைந்து இந்தச் சவால்களை வென்றெடுக்கும் போது, சித்திரைப்புத்தாண்டுக் காலத்தில் வெளிப்படுத்தப்படும் ஒற்றுமை மற்றும் பகிர்தல் போன்ற பண்புகளால் எமது வாழ்க்கையை மேலும் அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு நான் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

பிறந்துள்ள இந்தச் சித்திரைப் புத்தாண்டு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வாழ்த்துகின்றேன் -என்றார். (எ-இ)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நேற்றுக் காலை சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று, சுவாமி வீதிவலம் வந்தார். (க-17)


# போதைப்பொருள் வியாபாரி மாரவில அகில கைது

கொழும்பு, ஏப்.15

டுபாயில் தலைமறைவாக இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுத் தலைவர்களின் போதைப்பொருள் வியாபாரத்தை இலங்கையில் முன்னெடுத்துவந்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

டுபாயில் மறைந்திருக்கும் பிரபல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினர் 'கொண்ட ரஞ்சித்' என்பவரின் நெருங்கிய சகாவான 'ஹைடொப் துஷார' என்பவருக்காக இலங்கையில் போதைப்பொருள் விநியோகத்தை முன்னெடுத்து வந்த 'மாரவில அகில' என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊழல் தடுப்புப் பிரிவின் நிலையப் பொறுப் பதிகாரி இந்திக்க வீரசிங்கவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், வென்னப்புவ, தும்மலதெனிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது இவர் சிக்கியுள்ளார். நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்ட இந்தச் சோதனையின் போது, சந்தேகநபரிடமிருந்து 120 கிராம் 580 மில்லிகிராம் ஹெரோய்ன், 53 கிராம் 610 மில்லிகிராம் ஐஸ் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட மொத்தப் போதைப்பொருள்களின் பெறுமதி 75 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக வென்னப்புவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ-இ)



# கைதான மீனவர்களுக்கு 17 வரை விளக்கமறியல்!

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 4 பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மன்னார் வடக்கு, இரணைதீவுக்கு அண்மையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களின் விசைப்படகும் கைப்பற்றப்பட்டிருந்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டனர். அவர்கள் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். மீனவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக 21 படகுகளுடன் 145 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-35,55)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஏப்.15

முல்லைத்தீவு, தேராவில் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பெண்ணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சடலம் 52 வயதுடைய பெண்ணுடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# ஹெரோய்ன் விற்பனை; பெண் கைது



கொழும்பு, ஏப்.15

அதிர்ஸ்டலாபச் சீட்டு விற்பது போன்று 'ஹெரோய்ன்' போதைப்பொருள் விற்பனை செய்த பெண் ஒருவர் கண்டியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் கண்டி தலதா வீதியில் உள்ள ஒரு பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு முன்பாக அதிர்ஸ்டலாபச் சீட்டுகளை விற்பனை செய்வது போல் நடித்து, ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் மற்றும் 300 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# களைகட்டும் நுவரெலியா

நுவரெலியா, ஏப்.15

நுவரெலியாவில் வசந்தகால களியாட்ட நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது விடுமுறை என்பதால் வெளி மாவட்டங்களிலிருந்து வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இலங்கையின் அழகை மெருகூட்டும் இடங்களில் ஒன்றாக நுவரெலியா மாவட்டம் கருதப்படுகிறது. இதனால் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருவது வழக்கம். அதுவும் ஏப்ரல் மாதத்தில் சித்திரைப் புத்தாண்டு விடுமுறை மற்றும் வசந்த காலம் கொண்டாடப்படுவதால் திரளான மக்கள் வந்து இயற்கையை இரசித்துச் செல்வது வழக்கமாக உள்ளது. இம்முறையும் நகரசபையால் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், டித்வா புயலின் பின்னர் வெறிச்சோடியிருந்த விடுதிகள், வர்த்தக நிலையங்கள் மீண்டும் களைகட்ட ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# தொற்றாநோய்களின் பாதிப்பு; வடக்கு மாகாணம் முன்னிலை

கொழும்பு, ஏப்.15

**இலங்கையில் தொற்றாநோய்களால் பாதிக்கப்படுபவர்களின் விகிதத்தில், வடக்கு மாகாணமும் முன்னிலையில் உள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக் களம் தகவல் வெளியிட்டுள்ளது.**

மாவட்டங்களுக்கு இடையிலான நோய்ப் பரவலில் நகர்ப்புறங்களில் நீரிழிவால் 10.4 வீதமானோரும், உயர் இரத்த அழுத்தத்தால் 10.3 வீதமானோரும், கொலஸ்ட்ரோலால் 8.9 வீதமானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டப்புறங்களில் ஆஸ்துமாவால் 2.5 வீதமானோரும், பக்கவாதத்தால் 0.8 வீதமானோரும், வலிப்பால் 0.6 வீதமானோரும் ஒப்பீட்டளவில் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை கிராமப்புறங்களில் சிறுநீரக நோயால் 0.9 வீதமானோர் ஏனைய இடங்களைவிடச்சற்று அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ரீதியாக அவதானிக்கும் போது, உயர் இரத்த அழுத்தத்தால் கேகாலை (11.7 வீதம்) மற்றும் கண்டி (11.6 வீதம்) மாவட்டங்களில் அதிகமாகவும், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரோலால் கொழும்பு (10.7 வீதம், 9.1 வீதம்), கம்பஹா (10.5 வீதம், 9.6 வீதம்) மற்றும் யாழ்ப்பாணம் (10.4 வீதம், 9.9 வீதம்) மாவட்டங்களும் முன்னிலையில் உள்ளன. வவுனியா (2.4 வீதம்), பொலநறுவை (1.9 வீதம்) மற்றும் முல்லைத்தீவு (1.7 வீதம்) மாவட்டங்களில் சிறுநீரக நோயின் தாக்கம் ஏனைய மாவட்டங்களை விட அதிகமாக உள்ளது. ஆஸ்துமா மட்டக்களப்பு (4.4 வீதம்) மற்றும் முல்லைத்தீவு (4.2 வீதம்) மாவட்டங்களில் அதிகப் பரவலைக் கொண்டுள்ளது. இதய நோய், சிறுநீரக நோய், பக்கவாதம் மற்றும் வலிப்பு ஆகிய நான்கு நோய்களைத் தவிர, ஏனைய அனைத்துத் தொற்றா நோய்களும் பெண்களிடையே அதிக பரவல் விகிதத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக உயர் இரத்த அழுத்தம் ஆண்களில் 7.3 சதவீதமாகவும், பெண்களில் 12.7 சதவீதமாகவும் காணப்படுகின்றது என்றும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

## புலிகளின் ஆயுதங்களைத் தேடி மட்டக்களப்பில் அகழ்வு

மட்டக்களப்பு, ஏப்.15

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகிலுள்ள காணியில், விடுதலைப்புலிகளால் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. சுமார் 20 அடி ஆழம் வரை அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அங்கிருந்து எந்தவொரு ஆயுதமும் கண்டெடுக்கப்படாததால் அகழ்வு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. (எ-இ)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.15

வெளிநாட்டுச் சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டவந்த ஒருவர் நேற்று அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் சிலாபம், மாரவில பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய வர்த்தகர் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். 4 பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டில் உற்பத்தியான 'மென்செஸ்டர்' ரகத்தைச் சேர்ந்த சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (எ-இ)



## பலகாரங்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.15

இந்த வருடம் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்கான பலகாரங்களின் விலை கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச்சின் பொது நிதி (Public Finance) அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2026ஆம் ஆண்டு புத்தாண்டுப் பலகாரங்களுக்கான மொத்தச் செலவு 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 414 ரூபாவாக இருந்த சராசரி புத்தாண்டுப் பலகார மேசையின் செலவு, நடப்பாண்டில் 5 ஆயிரத்து 795 ரூபாவாக உயர்ந்துள்ளது. குறிப்பாக சில முக்கியமான பலகாரங்களின் விலை இம்முறை அதிரடியாக அதிகரித்துள்ளது. இனிப்புப் பலகாரங்கள், தொதல், பட்டர் கேக் என்பன விலை உயர்வைச் சந்தித்துள்ளன.

அதேவேளை பால் சோறு தயாரிப்பதற்கான செலவு கடந்த ஆண்டைவிட 14.1 வீதம் குறைந்துள்ளது என்றும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

## அதிவேக மோ.சைக்கிள்களுடன் பிலியந்தலையில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.15

சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான 5 அதிவேக மோட்டார் சைக்கிள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில், வாகனங்களைப் பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளரொருவர் பிலியந்தலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிலியந்தலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அங்கு ஒருங்கிணைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்று சுமார் 65 இலட்சம் ரூபா பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பிலியந்தலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## சீதேவியளை எட்டி மிதிக்காதையுங்கோ..!

யாழ்ப்பாணத்தில ஆறுதான் இல்லையெண்டு பார்த்தால், ஒழுங்கா ஒரு பார்க் (பூங்கா) கூட இல்லையெண்டது கொளுத்தியெரியிற இந்த வெயிலுக்கதான் தெரியுது. ரவுணுக்க ரண்டே ரண்டு பார்க் தான் இருக்கு. ஒண்டு 'ஓல்ட் பார்க்'(பழைய பூங்கா), மற்றது சுப்பிரமணியம் பூங்கா. இந்த ரண்டு பூங்காக்களுக்கும் பக்கத்தில யாழ்ப்பாணத்தின்ர முக்கியமான இடங்கள் இருக்கு. லைப்ரரி, கோட்டை, பழைய கச்சேரி எண்டு முக்கியமான அந்த இடங்களைப்பார்த்து ஆச்சரியப்படுற சுற்றுலாப்பயணியள் அதுக்குப் பக்கத்தில இருக்கிற இந்த ரண்டு பார்க்கையும் பார்த்தால் சத்தி தான் எடுப்பினம். அந்தளவுக்கு அந்தப் பார்க்குகளின்ர பராமரிப்பு இருக்குது. அந்த ரண்டையும் முனிசிபல் தான் பராமரிக்குது. பார்க்குக்க போறதுக்கு ரிக்கெற் காசும் முனிசிபலுக்குத்தான் போகுது. பார்க்குக்கு வாறவைக்கு ரிக்கெற்றைக் குடுத்து காசை வாங்கிறதும், ஒவ்வொரு நாளும் பார்க்கில இருக்கிற குப்பையளைக் கூட்டி அள்ளுறதும் தான் தங்கட வேலை எண்டு முனிசிபல் நினைக்குதுபோல.

இந்த ரண்டு பார்க்குமே பழமையானவை. யாழ்ப்பாணத்தின்ர பெருமையின்ர அடையாளமா இருந்த இடங்கள். அப்பிடிப்பட்ட பூங்காக்களை சும்மா சாட்டுக்கு கூட்டித் துடைச்சுக்கொண்டு இருந்தால் காணுமோ? அதுகளின்ர மரபு கெடாத வகையில இன்னும் வடிவாக்கி, எல்லாரையும் வரவைக்கிற மாதிரியான புதுமுயற்சியளையும் செய்யத்தானே வேணும்? புதுமுயற்சி செய்யுங்கோ எண்டா எங்கட ஆக்கள் உடனேயே அந்த ரண்டு பூங்காவுக்கையும் நிக்கிற பழமையான மரங்களை வெட்டுறதுதான் முதல்வேலையா இருக்கும். அந்த மரங்கள் தான் அந்தப் பூங்காக்களின்ர தொன்மையைச் சொல்லிக்கொண்டு நிக்குதுகள். அதால அந்த மரங்களையும், சூழலையும் பேணிக்கொண்டு இன்னும் அதை எப்பிடி இப்பத்தைப் பிள்ளையளுக்கு ஏத்தமாதிரி மாத்தலாம் எண்டு யோசிக்கோணும். ஆனால் பகிடி என்னெண்டால் கொஞ்சமாவது அங்க கவரக்கூடியதா இருந்த ஊஞ்சல்கள், சறுக்கீஸ்'கள், பொம்மையள் எல்லாம் பெயின்ற் உரிஞ்சு, கறள் பிடிச்சு 'ஆரும் கிட்ட வராதையுங்கோ' எண்டு சொல்லுறமாதிரிக் கிடக்கு. படங்களில பேயள் இருக்கிற இடம் மாதிரி உந்த ரண்டு பூங்காக்களும் மாறமுதல், இப்பவே கவனமெடுத்து புனரமைக்கிறது நல்லது.

'இப்ப எல்லாரும் போனோட இருக்கினமே தவிர ஆர் பூங்காக்களுக்கு வருகினம். உந்தப் பூங்காக்களை புனரமைக்கிற காசைப் பிரியோசனமா வேற வேலையளுக்குப் பாவிக்கலாமே?' என்டொரு மேதாவித்தனமான கேள்வியைச் சிலர் கேக்கக்கூடும். ஆனால் யாழ்ப்பாணத்தில தனியார் சிலர் வைச்சிருக்கிற பூங்காக்களுக்கு எங்கட சனம் வாகனம் பிடிச்சுப் போறதும், அதால அந்தப் பிரைவேட் பூங்காக்களுக்கு லட்சக்கணக்கில லாபம் வந்துகொண்டிருக்கிறதும் தெரியும் தானே. இப்ப தொடங்கின பிரைவேட் பூங்காக்களாலையே இப்பிடி ஆக்களை வரப்பண்ண முடியுமெண்டால், நூற்றாண்டுகளுக்கும் மேல பழமையான இந்த ரண்டு பூங்காக்களையும் அதுக்கேத்தபடி அப்டேட் பண்ணினால் இஞ்சையும் சனம் வரும் தானே. காலுக்க இருக்கிற சீதேவியை முனிசிபல் எட்டி மிதிக்காமல், அதைக் கட்டிக் காத்தால் காசும் வரும், சனங்களும் வருவினம். இந்த வெக்கையில ஆறுதலா எல்லாரும் வந்திருந்து கதைச்சு மகிழ ஒரு இடமும் உருவாகும் எல்லோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படங்கள் ஐ. சிவசாந்தன்







வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் பராபவ வருடப் பிறப்பு உற்சவம் நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.15

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் பன்னாலை திருவருள்மிகு சிவ பூதவராயர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெற வுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெறும் நிகழ்வில் திருமூலநாயனார் குரு பூஜையை அடுத்து மாணவர் களின் கலைநிகழ்வும், இளஞ் சைவப்புலவர் திருவாசகப்பிரி யன் நித்திய பாபுதரனின் 'தவ யோகியின் திரு அவதாரம்' எனும் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாண வர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-41)

# ஏக சண்டி ஹோமமும் கும்பாபிஷேகமும்

யாழ்ப்பாணம், ஏப்.15

பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு சண்டிகா பரமேசுவரி கோவிலில் ஏக சண்டி ஹோமமும், வசந்த மண்டபக் கும்பாபிஷேக மும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கிரியைகள் இடம்பெற்றன. நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை கிரியைகள் ஆரம்பமாகி ஏக சண்டி ஷோமம் இடம்பெற்றதைத் தொடர்ந்து விசேட பூசை வழி பாடுகள் இடம்பெற்று கும்பங்கள் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து வசந்த மண்டபக் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. (எ-41-100)





மானிப்பாய் மருதடி விநாயகர் பெருந்திரு விழாவின் சப்பறத் திருவிழா நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை இரவு பக்திபூர்வமாக நடைபெற்றது. (எ-41-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தேவையான பணம் கைக்குக் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் சில முடிவுகளை எடுப்பீர்கள். தந்தையின் விருப்ப த்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். முக்கியமான முடிவு எடுப்பதற்குச் சாதகமான நாள். செலவுகளுக்குத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை இருக்காது. உறவினர்கள் சிலர் உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூல மாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையின் விருப் பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். பிள்ளைகளால்சில பிரச்சினை கள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித் தாலும் அரவணைத்துச் செல்லவும்.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் கொள்ளா மல் இருப்பது அவசியம்.

**கன்னி:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக் கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது அனுகூலமாகும். கண வன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளி லும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளை களால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாயின் தேவையறிந்து அவருக்கு உதவு வீர்கள். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மகரம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டாலும் பொறுமை காப்பது அவசியம்.

**கும்பம்:** தேவையான பணம் இருந் தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# முன்னொரு காலத்தில் தமிழர்கள்...!

2024ஆம் ஆண்டுக்கான குடிசன மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பின் ஆரம்பகட்ட முடிவுகள், இலங்கைத் தமிழ் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக இருப்பின் அத்திபாரத்தையே உலுக்கக்கூடிய சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் வடமாகாணம் வெறும் 5.3 சதவீதத்தை மாத்திரமே கொண்டுள்ளது என்ற தரவை அவ்வளவு எளிதாக நாம் கடந்துவிடமுடியாது.

இலங்கையின் தேர்தல் அரசியல் என்பது 'எண்ணிக்கை' சார்ந்தது. ஒரு பிரதேசத்தின் சனத்தொகை குறையும்போது, அந்தப் பிரதேசம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் இயல்பாகவே குறையும். வடமாகாணத்தின் நான்கு மாவட்டங்கள் நாட்டின் மிகக்குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டங்களாகப் பதிவாகியுள்ளமை, எதிர்காலத்தில் தொகுதி மறுசீரமைப்பின்போது வடக்கு மாகாணத்தின் நாடாளுமன்ற ஆசனங்கள் கணிசமாகக் குறைக்கப்படுவதற்கு வழிவகுக்கும். நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் குரல் பலவீனமடைவது, தீர்மானம் எடுக்கும் சக்திகளில் அவர்களின் செல்வாக்கை இல்லாமல் செய்துவிடும். வடக்கின் சனத்தொகை அடர்த்தி முல்லைத்தீவில் சதுர கிலோமீற்றருக்கு வெறும் 50 பேர் எனச் சுருங்கியுள்ள நிலையில், நிலப்பரப்பு ரீதியான முக்கியத்துவத்தை விடவும், இன விகிதாசார ரீதியான பேரம் பேசும் சக்தி தமிழ் மக்களுக்குப் பெரும் சவாலாக மாறப்போகிறது.

போருக்குப் பிந்திய காலப்பகுதியில் வடக்கிலிருந்து இளைஞர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வது ஒரு தொடர்கதையாகிவிட்டது. அத்துடன், வடக்கு மாகாணத்தின் பிறப்பு வீதத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வீழ்ச்சியும், பொருளாதார வசதிகள் கருதி வேறிடங்களுக்கு மக்கள் நகர்வதும் கவலையளிக்கின்றன. திறமை மிக்க இளைஞர்கள் வெளியேறு வதால், வடமாகாணத்தின் உள்ளூர்ப் பொருளாதாரம் முடங்குவதுடன், 'முதியவர்களைக் கொண்ட மாகாணம்' என்ற நிலையை நோக்கி வடக்கு தள்ளப்படுகிறது. இது ஒரு சமூகத்தின் இயங்குசக்தியை மழுங்கடிக்கச் செய்யும் ஆபத்தான போக்காகும்.

இந்த நெருக்கடியான சூழலில் இருந்து மீளவும், தமிழ் மக்களின் அரசியல் இருப்பைத் தக்கவைக்கவும் சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. வடமாகாணத்திலேயே இளைஞர்கள் தங்கிவாழ்வதற்கு ஏற்றவகையில் சுயதொழில் வாய்ப்புகள், முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டுப் புலம்பெயர்வை ஒரு தீர்வாகப் பார்க்காமல், உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தும் உத்திகளை வகுக்கவேண்டும். அதேநேரம் பிறப்பு வீத வீழ்ச்சியைத் தடுக்கவும், கூட்டுக்குடும்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சமூக மற்றும் சமய நிறுவனங்கள் முன்வர வேண்டும். சனத்தொகை அடர்த்தி குறைவாக உள்ள பகுதிகளில், எதிர்காலத்தில் திட்டமிட்ட இனப்பரம்பல் மாற்றங்கள் நிகழ வாய்ப்புள்ளது. அதை எதிர்கொள்ள நிலங்களைப் பாதுகாப்பதோடு, உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் மீளக்குடியமர்த்துவதில் வேகம் காட்டவேண்டும். வெளிநாடுகளில் உள்ளவர்கள் நிதி உதவியோடு மட்டும் நின்றுவிடாமல், வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களில் நேரடியாக முதலீடு செய்வதன் மூலம் மக்கள் வெளியேற்றத்தைத் தடுக்க உதவ முன்வரவேண்டும்.

சனத்தொகை என்பது ஒரு தேசிய இனத்தின் பலம். அது வீழ்ச்சியடையும்போது, நிலம் மீதான உரிமையும், அரசியல் அதிகாரமும் தானாகவே பறிபோகும். 2024 கணக்கெடுப்புத் தரவுகள் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட அபாய எச்சரிக்கையாகும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட அரசியலைத் தாண்டி, சனத்தொகைப் பெருக்கம் மற்றும் பொருளாதாரத் தற்சார்பு குறித்த ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் தவறினால், 'முன்னொரு காலத்தில் வடக்கில் தமிழர்களும் இருந்தார்கள்' என்ற கதையே எதிர்காலத்தில் வரலாறாக எஞ்சியிருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## பொய்யாமொழி

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

பொருள்: முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.




# டித்வா இழப்பீடுகளுக்கு விசேட திட்டம் அறிமுகம்

**கொழும்பு, ஏப்.15**

**டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் வணிகக் கட்டடங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விசேட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்தத் திட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்ட இடங்கள் முக்கியமாக அதி அபாயகரமானவை, மத்திய அபாயகரமானவை மற்றும் குறைந்த அபாயகரமானவை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதி அபாயகரமான பிரிவின் கீழ் உள்ள வீடுகள் மீண்டும் முன்னுரிமை 1 முன்னுரிமை 2 மற்றும் முன்னுரிமை 3 எனத் துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

இந்த முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையிலேயே இழப்பீடு வழங்கப்படும் எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அதி அபாய வலயத்தில் உள்ள அனைவரும் மீளக் குடியமர்ந்துள்ள போதும், அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியை வினைத்திறனாகப் பகிர்ந்தளிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)



## குஷ் கடத்தியவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஏப்.15

குஷ் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை சுங்கப் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் 24 வயதுடைய இந்தியப் பிரஜை என்றும், போதைப் பொருளைச் சந்தேகநபர் தாய்லாந்தில் கொள்வனவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் பாங்கொக்கில் இருந்து கோலாலம்பூர் சென்று அங்கிருந்து கட்டுநாயக்க வந்துள்ளார். சந்தேகநபரின் பயணப்பொதிக்குள் இருந்த அட்டைப்பெட்டியின் பக்கச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுமார் 2 கோடியே 8 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 கிலோ 87 கிராம் எடையுள்ள 'குஷ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-இ)

## 3 நாள்களில் மட்டும் 16 கோடி வருமானம்

கொழும்பு, ஏப்.15

கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 3 நாள்களில், அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனங்கள் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை 163,291,065 ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்த 3 நாள்களில் மொத்தம் 434,338 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளன. இதில் அதிகப்படியான வாகனப் போக்குவரத்தும் வருமானமும் 10ஆம் திகதி பதிவாகியுள்ளது. அன்று 161,847 வாகனங்கள்பயணித்துள்ளதுடன், 59,815,450 ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## தவறி வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு


புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கொள்ளுப்பிட்டியில் நடந்துள்ளது. தலவாக்கலையைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார். கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இரும்புப் பகுதியொன்றைப் பொருத்த முற்பட்டபோது தடுமாறி அவர் கீழே வீழ்ந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பிற்பகல் வேளையில் மழைக்குச் சாத்தியம்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை வவுனியா மாவட்டங்களிலும் மற்றும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
வியாழக்கிழமை- சித்திரை 03
16.04.2026
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தொற்றாநோய்களின் பிடிக்குள் பெண்கள்!

## ஆய்வில் தகவல்

கொழும்பு, ஏப்.15

**இலங்கையில் ஆண்களை விடப் பெண்களிடையே தொற்றா நோய்களின் பாதிப்பு அதிகரித்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. 2024ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

நாட்டில் மொத்தச் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர், அதாவது 19.2 சதவீதமான மக்கள் ஏதேனும் ஒரு வகையான தொற்றாநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 80.8 சதவீதமான மக்கள் தமக்கு இத்தகைய நோய்கள் எவையும் இல்லை எனப் பதிவுசெய்துள்ளனர். பாலின ரீதியாக நோக்கும் போது, ஆண்களை விடப் பெண்களிடையே தொற்றாநோய்களின் பாதிப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. பெண்களில் 21.8 சதவீதத்தினரும், ஆண்களில் 16.4 சதவீதத்தினரும் குறைந்தபட்சம் ஒரு தொற்றாநோயாலாவது பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரோல் ஆகிய மூன்றுமே மிக முக்கியமான தொற்றா நோய்களாக உருவெடுத்துள்ளன. உயர் இரத்த அழுத்தத்தால் 10.1 சதவீதமானோரும், நீரிழிவால் 8.5 சதவீதமானோரும், உயர் கொலஸ்ட்ரோலால் 8.2 சதவீதமானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஏனைய நோய்களான இதயநோய் (2.5 வீதம்), ஆஸ்துமா (1.8 வீதம்), சிறுநீரக நோய் (0.8 வீதம்), பக்கவாதம் (0.6 வீதம்), புற்றுநோய் (0.4 வீதம்), வலிப்பு (0.3 வீதம்) மற்றும் தலசீமியா (0.1 வீதம்) ஆகியவையும் பதிவாகியுள்ளன. அத்துடன் மாவட்டங்களுக்கு இடையிலும், அவர்கள் வாழும் துறைகளுக்கு இடையிலும் நோய்ப்பரவலில் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

புத்தாண்டுக்காலத்தில்

## சுகாதார நடைமுறை மீறல்; 817 வர்த்தகர்கள் மீது வழக்கு

கொழும்பு, ஏப்.15

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்த மாதம் ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, 817 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.பி. பேரலெஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடு முழுவதும் 11 ஆயிரத்து 64 உணவு விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. 967 விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது தரமற்ற உணவுகளை விற்பனை செய்த மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறிய 817 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மூவாயிரத்து 45 உணவுப்பொருள்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றில் நுகர்வுக்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட 2 ஆயிரத்து 299 உணவுப்பொருள்கள் உடனடியாகவே அழிக்கப்பட்டன. இந்த விசேட சுற்றிவளைப்புகளில் சுமார் 2 ஆயிரத்து 300 பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புத்தாண்டுக்குப்பின்னரும் இந்தச்சோதனைகள் தொடரும். எனவே பொதுமக்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது, அதன் காலாவதித்திகதி மற்றும் தரத்தை அவதானிப்பதுடன், ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் அந்தந்தப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்-என்றார். (க-இ)

## மத்திய கிழக்கு நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தும் சீனா!

பீஜிங், ஏப்.15

ஈரான் மீதான போர் உலகளாவிய ரீதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் வெளியுறவு அமைச்சர் வாங் யீ ஆகியோர் கடந்த ஒரு வாரமாகப் பல நாடுகளின் தலைவர்களுடன் தொடர்ச்சியான சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் நேற்றுக் காலை அபுதாபி பட்டத்து இளவரசர் முகமது பின் சயீத் மற்றும் ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து, வியட்நாமின் உயர்மட்டத் தலைவர் தோ லாம் நான்கு நாள் பயணமாக நேற்றுச் சீனா சென்றுள்ளார்.

மறுபுறம், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவைச் சந்தித்ததுடன், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தாருடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார். ஈரானின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாகவும், அந்த நாட்டின் மசகு எண்ணெயை அதிகளவில் வாங்கும் நாடாகவும் சீனா இருந்தபோதிலும், தற்போதைய போரில் சீனா ஏன் நேரடியான அல்லது தீவிரமான பங்கை வகிக்கவில்லை என்ற கேள்வி சர்வதேச அரங்கில் எழுந்துள்ளது. சீனா தற்போதுவரை அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கான கோரிக்கைகளை மட்டுமே முன்வைத்து வருகிறது.

சீனாவின் தற்போதைய மௌனமும் நிதானமும் ஒரு நுணுக்கமான இராஜதந்திர நகர்வாகப் பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு மற்றும் கணிக்க முடியாத வெளியுறவுக்கொள்கைகளால் ஏமாற்றமடைந்த நாடுகளுக்கு, சீனா தன்னை ஒரு 'நம்பகமான மற்றும் நிலையான' கூட்டாளியாகக் காட்டிக்கொள்கிறது. அமெரிக்காவைச் சார்ந்து இருப்பதைத் தவிர்க்க விரும்பும் நாடுகளைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தருணத்தை சீனா பயன்படுத்திக் கொள்கிறது.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் போரில் கவனம் செலுத்திவரும் வேளையில், சீனா தனது இராஜதந்திர வலையை ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே விரிவுபடுத்தி வருவது சர்வதேச அரசியலில் ஒரு முக்கியமான மாற்றமாகக் கருதப்படுகின்றது என்று அல்ஜெஸீரா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-இ)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்; ஏப்ரல் 19 விசேட பிரார்த்தனை

கொழும்பு, ஏப்.15

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில், ஏப்ரல் 19ஆம் திகதி விசேட பிரார்த்தனை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டுள்ளார். தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் நீண்டகாலமாக எதிர்பார்த்துவரும் நீதி, உண்மைகள் வெளிவரவேண்டும் என்பதே இந்தப் பிரார்த்தனையின் முக்கியமான நோக்கமாகும்.

அன்றைய தினம், நாட்டின் அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் விசேட வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் நடைபெறும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

## மக்கள் மீது பொறியும் நிலக்கரி மோசடி நட்டம்



### சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 15

வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்குவந்த தற்போதைய அரசாங்கத்தினால், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் தாங்கொணா விலைவாசிப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிலக்கரி மோசடியால் ஏற்படும் நட்டத்தை மின்சாரப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்ற போதிலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூறினாலும், அது நடைமுறையில் சாத்தியமற்றது.

தரமற்ற நிலக்கரியால் போதிய மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாதபோது, அதிக செலவுடைய டீசல் மின்நிலையங்களைப்பயன்படுத்தவேண்டியுள்ளது. இந்த மேலதிகச் செலவு மறைமுகமாக மக்களின் மின்சாரக் கட்டணத்திலேயே சுமத்தப்படும். வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கத்தினால், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் தாங்கொணா விலைவாசிப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

மின்சாரக்கட்டணம், எரிபொருள், எரிவாயு மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தினால் நாட்டின் உணவுப் பாதுகாப்புக்குக் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே மக்களைக் காக்க அரசாங்கம் எடுக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் - அமெரிக்கா இடையே மீண்டும் பேச்சு நடத்த முயற்சி



**இஸ்லாமாபாத், ஏப்.15**

**ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான அணுசக்திப் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை நீடித்துவரும் நிலையில், இரு நாடுகளையும்மீண்டும்பேச்சுவார்த்தைமேசைக்குக்கொண்டுவர பாகிஸ்தான் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.**

தற்போது நடைமுறையில் உள்ள தற்காலிக போர்நிறுத்தம் முடிவடைவதற்கு முன்னதாக, இஸ்லாமாபாத்தில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்த பாகிஸ்தான் அதிகாரபூர்வமாக முன்மொழிந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவதற்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், இந்தச் சந்திப்பை அவசரமாக நடத்த பாகிஸ்தான் விரும்புகிறது. ஏற்கனவே நடைபெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் கருத்துவேறுபாடுகளைக் களைய இந்தச் சந்திப்பு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

## போரால் ஏற்பட்ட சேதங்கள் 270 பில். அமெரிக்க டொலர்!

### ஈரான் தெரிவிப்பு

தெஹ்ரான், ஏப்.15

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களால் ஈரான் அடைந்துள்ள பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு பாதிப்புகள் தொடர்பான முதற்கட்ட மதிப்பீடுகளை ஈரான் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. ஈரான் அரசின் ஊடகப் பேச்சாளர் பாத்திமா மொஹஜெரானி, ரஷ்யாவின் ஆர்.ஐ.ஏ நோவோஸ்டி செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் பின்வரும் விவரங்களை வெளியிட்டுள்ளார். தற்போதுவரை ஏற்பட்டுள்ள சேதங்கள் சுமார் 270 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இது ஒரு ஆரம்பகட்ட மதிப்பீடு மட்டுமே என்றும், முழுமையான ஆய்வுகளுக்குப் பிறகு இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். போரால் ஏற்பட்டுள்ள இந்த இழப்புகளுக்கு உரிய நட்டஈட்டைப் பெறுவதில் ஈரான் உறுதியாக உள்ளது. இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகளின் போதும், ஈரானிய பேச்சுவார்த்தைக் குழுவினர் நட்டஈடு தொடர்பான விவகாரத்தை மிகத் தீவிரமாக முன்வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலால் ஏற்பட்ட நேரடிச் சேதங்கள் மற்றும் மறைமுகப் பொருளாதாரப் பாதிப்புகளைப் பல கட்டங்களாக ஆராய வேண்டியுள்ளது என்று மொஹஜெரானி சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## ஈரான் கைகளிலேயே அடுத்த கட்ட நகர்வு!

### அமெ. துணை ஜனாதிபதி தெரிவிப்பு

நியூயோர்க், ஏப்.15

ஈரானுடன் சமீபத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது என்றும் அடுத்தகட்ட முடிவுகளை ஈரான் தான் எடுக்கவேண்டும் என்றும் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் இணைந்து நடத்திவரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் விதமாக ஈரான், அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் சில நாள்களுக்கு முன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்து 21 மணிநேரம் தொடர்ந்த இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ் தெரிவித்திருந்தார். பேச்சுவார்த்தை தவறாக மட்டுமே முடிந்ததாக நான் சொல்லமாட்டேன். சில விடயங்கள் சரியாக நடந்ததாக நான் நினைக்கிறேன். நாங்கள் நல்ல முன்னேற்றத்தை அடைந்தோம். அவர்கள் எங்கள் பேச்சைக் கேட்கும் நிலைக்கு வந்தனர். அதனால் தான் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது என்று சொல்கிறேன். ஆனால் அவர்கள் போதுமான அளவு பேச்சுவார்த்தையை நகர்த்தவில்லை. அணுசக்தி செறிவூட்டுவதை ஈரான் நிறுத்திக்கொண்டால் இந்தப் பேச்சுவார்த்தை நல்ல விதத்தில் முடிந்திருக்கும். அது இரு நாடுகளுக்கும் சாதகமான முடிவை எட்ட உதவியிருக்கும். மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தப்படுமா, இறுதியில் ஒரு உடன்பாட்டுக்கு வருவோமா என்பது ஈரானின் கையில்தான் உள்ளது.

நாங்கள் புரிந்துகொண்டது என்னவென்றால் அங்கிருந்த குழுவுக்கு ஒப்பந்தத்தை இறுதிசெய்ய முடியவில்லை. அவர்கள் ஈரானுக்குத் திரும்பிச் சென்று, அவர்களின் உயர் தலைவரிடமோ, மற்றவர்களிடமோ எங்களின் நிபந்தனைகள் தொடர்பாக ஒப்புதல் பெறவேண்டியிருந்தது. ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்கக்கூடாது என்பதில் அமெரிக்க ஜனாதிபதியுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## யேசுவாக மாறிய ட்ரம்ப் எதிர்ப்பால் பதிவு நீக்கம்

நியூயோர்க், ஏப்.15


திருத்தந்தை 14ஆம் லியோ தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதிப டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த விமர்சனங்கள் மற்றும் சமூக வலைத்தளத்தில் அவர் பகிர்ந்த ஒரு படம் ஆகியவை சர்வதேச அளவில் பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளன.

'ட்ரூத் சோஷியல்' தளத்தில் ட்ரம்ப் ஒரு படத்தைப் பகிர்ந்திருந்தார். அதில் மருத்துவமனை படுக்கையில் இருக்கும் ஒரு நபரின் மீது ட்ரம்ப் கைகளை வைத்திருப்பதும், அவரது கைகளிலிருந்து ஒளி வீசுவதும் போன்ற காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இதன்மூலம் அவர் தன்னை இயேசுவைப் போல சித்தரிப்பதாக பலதரப்பிலும் விமர்சனங்கள் எழுந்தன. தற்போது அந்தப் பதிவு நீக்கப்பட்டுள்ள நிலையில், இது குறித்து ட்ரம்ப் விளக்கம் அளித்துள்ளார்.

"அந்தப் படம் மக்களைக் குணப்படுத்தும் ஒரு மருத்துவராகவே என்னைச் சித்தரித்தது. ஆனால் ஊடகங்கள் திட்டமிட்டே நான் என்னை இயேசுவைப் போலக் காட்டுவதாக ஒரு கதையை உருவாக்கியுள்ளன" என்று அவர் குற்றம் சாட்டினார்.

இந்தச் சர்ச்சை எழுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை 14ஆம் லியோவை ட்ரம்ப் கடுமையாகச் சாடியிருந்தார். (எ-இ)





## சீனாவின் விவகாரங்களில் மூக்கு நுழைக்கவேண்டாம்

### அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை

பீஜிங், ஏப்.15

ஈரான் - சீனா இடையேயான இருதரப்பு உறவுகளில் தலையிடவேண்டாம் என்று அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் - அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் சனிக்கிழமை நடைபெற்ற போர்நிறுத்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததை அடுத்து, ஹோர்மூஸ்நீரிணையைஅமெரிக்கக்கடற்படை முற்றுகையிட்டுள்ளது. இந்தப் பின்னணியில் சீனப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அட்மிரல் டாங் ஜு அமெரிக்காவுக்கு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டார். ஈரானுடன் எங்களுக்கு வர்த்தக மற்றும் எரிசக்தி ஒப்பந்தங்கள் உள்ளன. எங்கள் விவகாரங்களில் யாரும் தலையிடக்கூடாது என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். சீனாவுக்குத் தேவைப்படும் மசகு எண்ணெயில் 40 சதவிகிதமும், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) 30 சதவிகிதமும் ஹோர்மூஸ் நீரிணை வழியாகவே கொண்டுசெல்லப்படுகிறது. ஹோர்மூஸ் நீரிணையை அமெரிக்கக் கடற்படை கைப்பற்றியிருக்கும் சூழலில், சீனாவுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

## ஈரானின் முன்மொழிவை நிராகரித்த அமெரிக்கா!

நியூயோர்க், ஏப்.15

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நீண்டகாலமாக நிலவிவரும் அணுசக்தி விவகாரத்தில், புதிய முன்மொழிவு ஒன்றை அமெரிக்கா நிராகரித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தனது அணுசக்தித் திட்டத்தின் ஒரு பகுதியான யுரேனியம் செறிவூட்டலை அடுத்த 5 ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது. ஆனால், இந்தக் கால அவகாசம் போதாது எனத் தெரிவித்த அமெரிக்கா, குறைந்தபட்சம் 20 ஆண்டுகளுக்கு இந்தத் திட்டத்தை முடக்கவேண்டும் என வலியுறுத்தி ஈரானின் கோரிக்கையை நிராகரித்துள்ளது. மூத்த ஈரான் மற்றும் அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி தி நியூயோர்க் டைம்ஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிசக்தி விநியோக கட்டுப்பாடு விதிப்பதைத் தவிர்க்கவேண்டும்

## சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்து!

**ஜெனீவா, ஏப்.15**

**உலக நாடுகள் எரிசக்தி விநியோகத்தைப் பதுக்குவதையும், ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதையும் தவிர்க்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் சர்வதேச எரிசக்தி முகவரகம் ஆகிய அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.**

உலகளாவிய எரிசக்திச் சந்தையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய அதிர்ச்சியை இத்தகைய நடவடிக்கைகள் மேலும் மோசமாக்கும் என இந்த அமைப்புகள் எச்சரித்துள்ளன.


இது தொடர்பாக சர்வதேச எரிசக்தி முகவரகத்தின் தலைவர் பாத்திஹ் பிரோல் தெரிவித்துள்ளதாவது- பல நாடுகள் எரிசக்தி இருப்புகளைத் தேக்கி வைப்பதையும், ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. அனைத்து நாடுகளும் எரிசக்தி இருப்புகள் தடையின்றிச் சந்தைக்குவர அனுமதிக்கவேண்டும்-என்றார்.

சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்ததுபோது- "முதலில் தீமை செய்வதை நிறுத்துங்கள்" என்று குறிப்பிட்டார்.

ஆசியா, துணை சஹாரா ஆபிரிக்கா மற்றும் சில தென்பசுபிக் தீவு நாடுகளின் எரிசக்தி விநியோகம் மிகுந்த கவலையில் இருப்பதாகவும், அந்த நாடுகளின் தலைவர்களைத் தான் சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திடீர்க் கட்டுப்பாடுகள் உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனப் பொருளாதார வல்லுநர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

(எ-இ)



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில், புத்தாண்டுப் பிறப்பன்று, கைலாச வாகனத்தில் அம்மன் எழுந்தருளி வீதி வலம் வந்தார். (க-17)



## மரண அறிவித்தல்



பிறப்பு 25 . 12 . 1942

இறப்பு 12 . 04 . 2026

**காசி நாகரத்தினம்**

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், CTB)**

கட்டுவனை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் மற்றும் ஜேர்மன் நாட்டில் வசித்தவருமான காசிப்பிள்ளை நாகரத்தினம் கடந்த 12.04.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை இலட்சுமி தம்பதியின் இரண்டாவது புத்திரனும் காலஞ்சென்ற தம்பிராசா பாக்கியம் தம்பதியின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் நஜீபாகுமாரி (கொழும்பு), சஞ்சீவ்குமார் (ஜேர்மனி), சர்மிளா குமாரி, நிரோஜனாகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கண்ணதாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கொழும்பு), பேபியாழினி (ஜேர்மனி), கலைச்செல்வன் (உத்தியோகத்தர், ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்), றொஷான் குணவர்தன (பொலிஸ் உத்தியோகத்தர், காங்கேசன்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), குணரத்தினம் மற்றும் நவரத்தினமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை- திருகோணமலை), கனகரத்தினம் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், இலங்கை கல்வித் திணைக்களம், பெல்ஜியம்), தங்கரத்தினம், இராசரத்தினம் (ஓய்வுபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், கனடா), அழகரத்தினம் (லண்டன்), சற்குனானந்தரத்தினம் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான லியோ சந்தியாப்பிள்ளை, சிவநாதப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), பத்மநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), தங்கரத்தினம் மற்றும் லோகேஸ்வரி (கனடா), மீனலோஜினி (ஓய்வுபெற்ற ஆசிரியை) (கொழும்பு), பரஞ்சோதிலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தருண் தனுஷ்க (கொழும்பு), தர்ஜிதா தனுஷ்டிகா (கொழும்பு), துஜி பியாஷா, கஷ்விந் மானவ், லிவின் பிரணீஷ், பிரஜின் நிகேஷ், ஓசாறா (ஜெர்மனி), விவேகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2026) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜ பவனம்,**
**இல. 124/10,**
**டாக்டர் சுப்பிரமணியம் வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0094 74 198 3097**
**0094 77 934 8512**

(CS 61107) A

## மரண அறிவித்தல்



மண்ணில் 21 . 06 . 1948

விண்ணில் 14 . 04 . 2026

**சித்தர் கந்தசாமி**

**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)**

மாறாம்புலம் அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சித்தர் கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்கள் நேற்று (14.04.2026) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர் - முதலிச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - வல்லாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானவதி அவர்களின் அன்புக் கணவரும், சிவதீபன், பிறேமகாந்தன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான கஸ்தூரி, சுமன் மற்றும் கிருஷ்ணாயினி, காலஞ்சென்ற பிரணவன் மற்றும் கோகுலவாசன் (கனடா), துர்க்காயினி (கனடா), கிருஷ்ணரட்சகன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர்), கஜான்னன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபநந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதம செயலாளர் அலுவலகம் - வடமாகாணம்), ஹேமா (லண்டன்), முகுந்தன் (ஆசிரியர் - யா/ ஹாட்லிக் கல்லூரி), அகல்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை), சந்திரரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்ஸ்மிக்கா, தஜக்சிதா, பிரணீஸ், கனீசன், தனுசிகா, பிருத்தீஸ், பிருத்திகா, சதுர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும், பரமானந்தம், வனஜாதேவி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-04-2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**"கிருஷ்ணகோட்டம்" மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு, பருத்தித்துறை**

**077 788 0208, 077 434 7967**

(CS/61204) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் குடத்தில் விழுந்தால்
தேனிக்குக்கூட அது சமாதி
தான்;
அதுபோலத்தான்
மனிதனுக்குச் செல்வமும்.

– கண்ணதாசன்

புதன் பொய்கை

15.04.2026
புதன்கிழமை




# உயர்தரப் பெறுபேறு:

## ஒரு புதிய பாதைக்கான திறவுகோல் மட்டுமே!

■ திருமதி பிரதீபா சிவகுமார்
தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர்
விலங்கியல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கையில் க.பொ.த. உயர் தரப் பரீட்சை என்பது ஒரு சாதாரண தரப் பரீட்சை போலன்றி பல ஆண்டுகளாகச் செய்த கடின உழைப்பு, கனவுகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாகும். பெறுபேறுகள் வெளியானதும், சமூகமும் சுற்றுப்புறமும் இதைப் பெரும்பாலும் 'வெற்றி' அல்லது 'தோல்வி' என்ற கோணத்தில் மட்டுமே மதிப்பிடுகின்றன. ஆனால் உண்மையில், உயர்தரப் பெறுபேறு உங்கள் எதிர்காலப் பயணத்திற்கான ஒரு புதிய பாதைக்கான திறவுகோல் மட்டுமே.

பல இளைஞர்களின் மனங்களில் உயர் கல்வியினைப் பெறுவதே இறுதிக்கனவாகக் காணப்படுகின்றது. நவீன அறிவு, திறமைகள் மற்றும் நல்ல மனோநிலை போன்றவற்றை மட்டுமல்லாமல் அவர்கள் முன்னேறுவதற்கான புத்திக்கூர்மையைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவது பல்கலைக்கழகங்களின் பொறுப்பாகும். பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் பொறுப்பான 'ஒரேயொரு நிறுவனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவே ஆகும்.

இலங்கையில் 16 அரச பல்கலைக்கழகங்கள், 2 வளாகங்கள் மற்றும் 2 உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பட்டப்பயில்நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறையை பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவானது மேற்கொள்கின்றது.

பல்கலைகழக அனுமதி தொடர்பான சகல தகவல்களையும், மற்றும் வழிகாட்டல்களையும் அந்த ஆண்டுக்கான பல்கலைகழகக் கைநூல் விபரிக்கின்றது. இந்தக் கைநூல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்றது.

உங்களது விருப்பத்திற்கேற்ப பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிகளைத் தெரிவுசெய்வதற்கு இந்தக் கைநூல் வழிகாட்டுகின்றது. அத்துடன் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான தகைமைகள், விதிகள், பிரமாணங்கள், கொள்கைகள் பற்றிய தகவல்களையும் பெற இந்தக் கைநூல் உதவுகின்றது.

### பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பது எப்படி?

மேலும் அரச பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பும் அனைத்து மாணவர்களும் இலத்திரனியல் விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தும் முன்னர் இந்தக் கைநூலினைக் கவனமாக வாசிக்கவேண்டியது கடமையாகும். வெவ்வேறு பாடச்சேர்க்கைகள் தொடர்பான சரியான புரிதலானது தங்களது விருப்பத்திற்குரிய கற்கைநெறியினைத் தெரிவுசெய்வதற்கு உதவும். அவ்வாறு மேற்கோள்ளாது பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் தமக்கு மிகவும் விருப்பத்திற்குரிய கற்கைநெறிகளைத் தவறவிடுதல்; அல்லது அனுமதிக்கான தகைமையை முற்றிலும் இழந்து விடும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.


அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அனுமதிக் கொள்கைகள் பாடப் பிரிவுகளுக்கிடையில் வேறுபடுகின்றன.

மாணவர்களைத் தெரிவுசெய்கையில் நாடளாவிய திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

விதிவிலக்காக சங்கீதம், நடனம்,நாடகமும் அரங்கியலும்,கட்புலக் கலை, கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை, சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளுக்கான தெரிவு மாவட்ட திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் வணிகப் பிரிவு, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதீக விஞ்ஞானப் பிரிவு, பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு, உயிரியல் முறைமை தொழில்நுட்பப் பிரிவு மற்றும் வெவ்வேறு பாடப்பிரிவுகளிலிருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகைமை பெறுகின்ற கற்கைநெறிகளுக்கான அனுமதிகள்; கற்கைநெறியொன்றிற்குத் தீவளாவிய திறமை அடிப்படையில் 40% வரை நிரப்பப்படும். மீதமுள்ள 60சதவீத்தில் 55% மாவட்ட திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படும். மீதமாகவுள்ள 5% விசேட ஒதுக்கீடாகும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகளாக




பரீட்சார்த்திகள்; மூன்று (3) அமர்வுகளுக்குள், அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (3s) உம் பொதுச் சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30%புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பெறுபேறுகள் பெற்ற விண்ணப்பதாரிகள்; பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும். பொதுச் சாதாரண வினாத்தாளில் குறைந்தது 30 % புள்ளிகளுக்கு குறைவாக இருந்தால் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.

ஆனால் அவர்களும் இம்முறை முதற் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அனுப்புதல் கட்டாயமாகும்.


அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற் குறிப்பிட்ட தேவையை முந்தைய தடவையில் நடைபெறவிருக்கும் உயர்தரப் பரீட்சையில் (அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள்) தனியே பொதுச் சாதாரண பரீட்சைக்கு மட்டும் தோற்றி சித்தி பெற்றுக்கொண்டால் மாத்திரமே அடுத்துவரும் கல்வியாண்டில் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

அடுத்த வாரம் தொடரும்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பசுமையை இருளாக்கும் பாதீனியம்





● கில்டா தேவராசா

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இன்று மிக வேகமாகப் பரவி வரும் ஒரு ஆக்கிரமிப்புத் தாவரம் பாதீனியம். தொடக்கத்தில் சாதாரணக் களைச்செடியாகக் கருதப்பட்ட இது, இன்று மனித ஆரோக்கியம், விவசாயம் மற்றும் நாட்டின் பல்லுயிர்த் தன்மைக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தத் தாவரம் இலங்கைக்குச் சொந்தமான தாவரமல்ல. இதன் வருகை குறித்த ஆய்வுகள் இரண்டு இரு வேறு ரீதியில் ஆராயப்படுகின்றன.

**இராணுவ வாகனங்களின் வருகை**

1980களின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் வாகனங்களின் ரயர்கள் மற்றும் அவர்களது உபகரணங்களுடன் இச் செடியின் விதைகள் ஒட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்திருக்கலாம்.

அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆட்டுத்தீவனங்கள் மற்றும் சில தானிய வகைகளுடன் கலந்தே இவை இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியிருக்கலாம். இப்படி இருவேறு ஊகங்கள் நிலவுகின்றன.

இன்று யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் பாதீனியம் ஒரு கட்டுப்பாடற்ற ஆக்கிரமிப்புத் தாவரமாக உருவெடுத்துள்ளது.

பாதீனியம் என்பது வெறும் செடி மட்டுமல்ல, அது ஒரு நச்சுத் தொழிற்சாலை. இதன் பாதிப்புகளை மூன்று நிலைகளில் பிரிக்கலாம்:

**1. மனித ஆரோக்கியம்:**

பாத்தீனியத்தில் உள்ள 'பார்த்தீனின்' (PARTHENIN) என்ற நச்சுப்பொருள் காற்றில் கலக்கும்போது, சுவாசக் கோளாறுகளை (ஆஸ்துமா) ஏற்படுத்துகிறது. இதனைத் தொடுவதால் கடுமையான தோல் அரிப்பு, முகம் வீங்குதல் மற்றும் ஒவ்வாமை போன்றவை ஏற்படும்.

**2. விவசாயம் மற்றும் பொருளாதாரம்:**

இது ஒரு 'அலிலோபதி' (ALLELOPATHY) தாவரமாகும். அதாவது, இது தன் வேர்கள் மற்றும் இலைகள் வழியாக ஒரு வேதிப்பொருளைச் சுரந்து, அருகில் வளரும் ஏனைய பயிர்களின் வளர்ச்சியைத் தடுத்துவிடும். இதனால் சோளம், வெங்காயம் மற்றும் பருப்பு வகைகளின் அறுவடை 40%-50% வரை குறைய வாய்ப்புள்ளது.

> "பூக்கத் தொடங்கும் முன்பே பிடுங்கி எறி இல்லையேல் உன் நிலம் உனக்குச் சொந்தமில்லை."

**3.கால்நடைப் பாதிப்பு:**

கால்நடைகள் இச்செடியை மேய்ந்தால் அவற்றின் வாயில் புண்கள் ஏற்படுவதுடன், பால் கசப்புத் தன்மையை அடையும். சில நேரங்களில் இது கால்நடைகளின் உயிரிழப்புக்கும் காரணமாகிறது. அழிக்கும் முறைகள்: ஒரு கூட்டு நடவடிக்கை ஆராய்ச்சி அடிப்படையில் பாத்தீனியத்தை அழிக்கப் பின்வரும் மூன்று வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன:

**1. உயிரியல் முறை நிரந்தரத் தீர்வு**

இலங்கை விவசாயத் திணைக்களம் தற்போது சைகோகிராமா பைகோலரேட்டா எனப்படும் மெக்சிகன் வண்டுகளைப் பயன்படுத்துகிறது. இந்த வண்டுகள் பாத்தீனிய இலைகளை மட்டும் உண்டு, செடியைப் பூக்க விடாமல் தடுத்து இயற்கையாகவே அழிக்கும்.

**2. தாவரப் போட்டிமுறை**

பாதீனியம் வளரும் இடங்களில் சாமந்தி அல்லது துத்தி போன்ற செடிகளை வளர்ப்பதன் மூலம் அதன் ஆக்கிரமிப்பை இயற்கையாகத் தடுக்கலாம்.

**3. இயந்திர மற்றும் வேதியியல் முறை**


உப்பு நீர் சிகிச்சை: 20% அடர்த்தியுள்ள சாதாரண உப்புக் கரைசலை (1 லீற்றர் நீரில் 200 கிராம் உப்பு) பூக்கும் முன்பே தெளிப்பதன் மூலம் செடிகளைப் பொசுக்கலாம்.

அண்மைக் காலங்களில் பாதீனியம் செடியை களைந்து கொண்டு வந்து தருபவர்களுக்கு 1கிலோவுக்கு 200 ரூபா வீதம் வழங்கப்படும் என சில அறிவிப்புகள் வெளியாகியிருந்தன. இதன் மூலம் பாத்தீனியத்தை சிலர் ஏன் வளர்த்து விற்கக் கூடாது என்று தவறாக எண்ணினால், நிலைமை நேரெதிராக மாறிவிடும். எனவே பாதீனியம் வீடுகளில் அல்லது காணிகளில் இருந்தால் தண்டப்பணம் அறவிடப்படும் என அறிவித்தால் பாதீனியம் முற்றுமுழுதாக அழிக்கப்படாவிடினும் அது இழிவளவாக்கப்படும்

பாதீனிய ஒழிப்பு என்பது ஒரு தனிநபரின் வேலையல்ல. ஒரு பாதீனியம் தனது வாழ்நாளில் 25,000க்கும் மேற்பட்ட விதைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. எனவே, வீதியோரங்களிலும் விளைநிலங்களிலும் இந்தச்செடியைக் கண்டால், தகுந்த பாதுகாப்பு அங்கிகளை (கையுறைகள், முகக்கவசம்) அணிந்து அவற்றை வேரோடு பிடுங்கி அழிப்பதன் மூலமே இலங்கையின் எதிர்கால விவசாயத்தைக் காப்பாற்றமுடியும்.

---

# எங்கள் ஊர்ப்பெயர்கள்: தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏன் வேறுபாடு?




ஒரு மனிதனுக்கு அவனது பெற்றோரிட்ட பெயரை அவனது சொந்த மொழியில் எழுதும் போது அந்த மொழியின் வரிவடிவத்தில் அமைவுறும். ஏனைய மொழிகளில் எழுதும் போது அந்தந்த மொழிகளின் வரிவடிவிலேயே எழுதப்படும். ஆனால் ஒலிவடிவம் சொந்த மொழியாயினும் வேறு எந்த மொழியாயினும் மாறுபடாது. இது அனைவருக்கும் பொதுவான விடயமாகும். இது இடப்பெயருக்கும் பொருந்தும். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியின் இந்திய-இலங்கைத் தேசங்களில் அவர்கள் சென்னையை 'மெட்ராஸ்' என்றும், இலங்கையை 'சிலோன்' என்றும், பருத்தித்துறையை 'பொயின்ற் பெற்றோ' என்றும் பெயரிட்டு அழைத்தார்கள். ஆனால் இன்று மட்ராஸ் 'சென்னை' எனத் தனித்தமிழில் சொந்த மொழியில் மொழிப்பெயரில் அழைக்கப்படுகின்றது; எழுதப்படுகின்றது. அதுபோன்று நமது நாட்டின் பெயரும் இன்று சிங்களப் பெயரான 'சிறிலங்கா' என்றே வழக்கில் உள்ளது. தமிழிலோ ஆங்கிலத்திலோ நாங்கள் சிலோன் என்று எழுதுவதில்லை; பேசுவதில்லை. ஆனால் நமது தமிழ் நகரங்களின் பெயர்கள் இன்னும் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபடவில்லை. யாழ்ப்பாணத்தை ஆங்கிலத்தில் 'யவ்னா' என்றே எழுதுகின்றோம். அதேபோன்று பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு என்று தமிழில் சொன்னாலும் கூட, 'பொயின்ற் பிற்றோ', 'கைற்ஸ்', 'டெல்வ்ற்' என்றே ஆங்கிலத்தில் எழுதுகின்றோம். இனிப்படி தமிழில் ஒரு பெயரும், ஆங்கிலத்தில் இன்னொரு பெயருமாக அல்லாடுகிறோம். ஒரு இடத்தின் பெயரை எல்லாமொழிகளிலும் ஒரேமாதிரியாக அழைப்பதும், எழுதுவதும் எம்மிடையே ஏன் இல்லாமல் போனது? இந்த மொழியியல் மாற்றம் அவசியமானது. தமிழ்ப் பேரறிஞர்களுக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

● ஆனையூர்க்கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிள்ளைகளுக்கு சிறந்த வழிகாட்டிகள் பெற்றோரே!

பழனித்துரை தர்மகுமாரன்
(ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி)



பெற்றோரே பிள்ளைகளை சமூகத்துக்கு ஏற்றவகையில் நாட்டுக்குத் தேவையான நற்பிரஜையாக உருவாக்க முடியும். ஏனெனில் பிள்ளைகளின் முதல் ஆசிரியர் பெற்றோரே. அதன் பின்னர்தான் ஏனையவர்களின் வழிப்படுத்தலுக்கு உட்படுத்துகின்றனர். ஒரு பிள்ளை அறிவாளியா அல்லது அறிவற்றவனா என்பது ஒரு பிரச்சினை அல்ல. சமூகத்திற்கு ஏற்றவகையில் சமூக விழுமியங்கள் பண்பாடு, கலாசாரம் என்பவற்றை பின்பற்றி உயிரிலும் மேலான ஒழுக்கத்தை ஒழுகாத வகையில் கடைப்பிடிக்கிறானா என்பது காலத்தின் தேவையாக உள்ளது. இங்கு பிள்ளைகளின் வளர்நிலைப் பருவங்களுக்கு ஏற்ப அவர்களை வழிப்படுத்தவேண்டியவர்கள் பிரதானமான நிறுவனங்கள் குடும்பம், பாடசாலை , ஆன்மிகத் தலங்கள் என்பன உள்ளன. இவற்றை உயிரோட்டமாக மாற்றியமைப்பவர்கள் குடும்பத்தில் பெற்றோர், பாடசாலையில் ஆசிரியர்கள், ஆன்மிகத் தலங்களில் ஆன்மிக குருவானவர்கள். இவர்களே பிள்ளை வளர்ப்பில் பொறுப்பு வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு பிள்ளை பிறந்ததிலிருந்து வளர்ந்து வரும் வரை குடும்ப சூழல், பௌதீக சூழல், சமூக சூழல், உளச்சூழல், ஆன்மிக சூழல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் இவை அனைத்தும் இன்று புறக்கணிக்கப்படுவதால் பிள்ளை பிறழ்வான நடத்தைக்குத் தள்ளப்படுன்றது. குடும்ப சூழல் என்பது தாயாலும் தந்தையாலும் கட்டியெழுப்பப்படும் மிகவும் உயர்ந்த உன்னதமான சூழல் ஆகும். இங்கு அடிப்படைத் தேவையுடன் இரண்டாம் நிலைத் தேவையாக அன்பும், பாதுகாப்பும் பிரகாசமாக இருக்கவேண்டும்.




பிள்ளைகளை ஆசைக்கு வாழப்பழக்காது தேவைக்கு ஏற்றவகையில் வாழப் பழக்கவேண்டும். பிள்ளை கேட்டதை எல்லாம் வாங்கிக்கொடுப்பது, செய்து முடிப்பது அன்பு அல்ல. பிள்ளைக்கு கெட்டது எது நல்லது எது செய்யக்கூடியது எது செய்யக்கூடாதது எது என சுட்டிக்காட்டி பிள்ளையுடன் நீண்ட நேரம் உரையாடுவதே அன்பு. தனது பெற்றோர் தனது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்து பாதுகாப்பாக உள்ளனர் என்ற நம்பிக்கையை பிள்ளைக்கு ஏற்படுத்தவேண்டும். பிள்ளைகள் முன்னிலையில் நல்ல பெற்றோராக தோற்றமளிக்கவேண்டும். பெற்றோர் தமக்காகவே வாழ்கின்றனர் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளுடன் ஒன்றாக இருந்து உணவு உண்ணல், குறிப்பிட்ட நேரம் குடும்பமாக பேசி மகிழ்தல், நல்ல விடயங்களை அடிக்கடி பேசுதல், நேர்ப்பாங்கை வளர்த்தல், எதிர்மறைப்பாங்கை இல்லாது செய்தல், மரியாதை, கருணை, விட்டுக்கொடுத்தல், பகிர்ந்து உண்ணல், உதவி செய்தல், போன்ற உயரிய பண்புகளை குடும்ப சூழலில் விதைக்கவேண்டும். பிள்ளைகள் எவ்வளவு ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று பெற்றோர் எதிர்பார்ப்பது போலவே பிள்ளைகளும் தமது பெற்றோர் எவ்வாளவுக்கு சமூகத்தில் மதிக்கப்படுகிறார்கள் என்று சிந்திக்கிறனர். எனவே பெற்றோரும் தமது ஒழுக்கத்தில் அதிக அக்கறை கொள்ளவேண்டும்.

உண்மையிலே ஒரு தாயால் மட்டுமே பிள்ளையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மாற்றியமைக்கமுடியும். எனவே தாய் என்பவள் தனது தொழில் செய்யும் இடத்தில் இருக்கும் சுமையை அங்கேயே இறக்கிவிட்டு வரவேண்டும். குடும்பத்துக்குள் நுழையும் போது நல்ல அம்மாவாக காட்சி கொடுக்க வேண்டும். பிள்ளைகள் கூறுகின்ற விடயங்களைச் செவிமடுக்கவேண்டும். பிள்ளை தனது கருத்தை முன்வைக்க முதலே பதிலைக் கூறக் கூடாது. பிள்ளை 'தலையிடிக்குது' என்றால்' பனடோலைப் போடு 'என்று கூறுவதைத் தவிர்த்து' ஏன் தலையிடிக்கிறது, எப்போது இடிக்கத் தொடங்கியது ?'என்ற வினாவுடன் தலைதொட்டு பிள்ளையை கட்டியணைத்து அதன் பின் தீர்வு வழங்குவது பிள்ளைகளுக்கு அன்பை ஊற்றெடுக்கச்செய்யும். இது இன்றைய காலகட்டத்தில் பல குடும்பங்களிலும் இல்லாது போய் பிள்ளைகள் கேட்கின்ற கேள்விகள் அனைத்தும் கைத்தொலைபேசியின் மூலம் தீர்க்கப்படுகிறது. இதனைத் தவிர்த்து பிள்ளையுடன் உடல் ரீதியான தழுவலுடன் பெற்றோர் செயற்படவேண்டும். கல்வி கட்டாயமானது. அதனை நாள் பூராகவும் செயற்படவைப்பது ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்காது. ஆரோக்கியமற்ற வெறுப்புணர்வுள்ள அறிவாளிகளையே உருவாக்கும். இது சமூகத்திற்கு பயன் அற்றது.

பாடசாலைகளில் பகுத்தறிவுக்கு அப்பால் இன்று பரீட்சையில் புள்ளிகளை மட்டும் பெற்றால் போதும் என்ற நிலை உருவாகியுள்ளது. அதனால் பாடப் புத்தகங்கள் வாசிக்கப்படுவதில்லை, விளக்கங்களோ, அறிவுரைகளோ, அனுபவங்களோ தேவையில்லை வினாவிடையைக் கொடுத்து பரீட்சையில் நல்ல புள்ளிகளைப் பெற்றால் அது சிறந்த பாடசாலை. ஆசிரியர்களின் கைகள் கட்டப்பட்டதனால் அவர்கள் பாடசாலையில் வெறும் பார்வையாளர்களாகவே உள்ளனர். தமது பாதுகாப்பைப் பற்றியே சிந்திக்கின்றனர். அவர்களுக்காக குரல் கொடுக்கவோ, பாதுகாக்கவோ எவருமில்லை என்ற நிலையில் தன்னையும் ஆசிரியத்துவத்தையும் தொலைத்து புலம்புகிறார்கள். பாடசாலையிலும் பதிவேடு, நீலப்புத்தகம், பாடப்பரப்பு, பிள்ளைகளுடன் முரண்படாத ஆசிரியர்கள் நல்ல ஆசிரியன். மாறாக அறிவுரை கூறி, ஒழுக்கத்தைப் போதித்து, பிள்ளையைக் கண்டித்து அக்கறை கொள்ளும் ஆசிரியர்கள் தண்டிக்கப்படுகிறான். இதனால் பிள்ளைகளின் ஒழுக்கம் கருவறுக்கப்படுகின்றது. பிள்ளையின் பருவகால செயற்பாட்டைக் கட்டுப்படுத்தி கல்விக்குள் கொண்டு வருவதற்கு ஆசிரியர்கள் படும்பாடு சொல்லில் அடங்காது.

மேலைத்தேய சட்டங்கள் எம்மைக் கட்டுப்படுத்தும் போது இதுவரையில் அதற்கான மாற்றுவழிகள் பின்பற்றப்படவில்லை, மாற்றுக்கொள்கைகள் உருவாக்கப்படவில்லை, பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகங்களுக்கும் இடையில் உடன்பாடுகள் எட்டப்படவில்லை. இவ்வாறான சூழலில் ஒழுக்கம், கலை கலாசாரப் பண்பாடுகள் பாதுகாக்கப்படும் என்பது அறிவாளிகளின் அறிவிலித்தனம் என்றே கூறவேண்டும். அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய உள்ளூர்ச் சட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். பிள்ளை தான் செய்யும் தவறுக்கு எதிர்வினை ஒன்று நடைபெறும் என்ற பயம் இன்று இல்லை. பயத்தில் ஏற்படுவதே பக்தி அறத்தை மீறுவது அநீதி. இதுவே ஆன்மிகம். இன்றைய நிலையில் ஆலயங்கள் பயத்தையோ பக்தியையோ போதிக்காது ஆடம்பர நிகழ்வுகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கின்றன. இதனால் ஆன்மிகம் தள்ளாடுகிறது. ஆலயங்களை, தேவாலயங்களை நோக்கி விசுவாசத்துடன், பக்தியுடன், அமைதியைப் பேணுவதற்கு, ஆண்டவனிடம் முறையிடுவதற்கு தற்காலத்தில் யாரும் தயாரில்லை. வெறும் சம்பிரதாயபூர்வமாகவே செயற்படுகின்றனர். இங்கு போதனையும் இல்லை, சோதனையும் இல்லை அதனால் சமூகம் வேதனைக்குள் தள்ளப்பட்டுள்ளது. மனிதனுக்குப் பிரச்சினை இல்லை என்றால் சாமிக்கு அர்ச்சனை இல்லை என்று ஆன்றோர் கூறுவர். இன்று அதற்கு மாறாக பிரச்சினைகள் சமூகமயப்பட்டு யாரோடு யார் பேசுவது என்ற நிலையில் கடவுளையே பிரச்சினைக்கு உட்படுத்தும் சமூக அமைப்பில் வாழ்கிறோம் என்பதுதான் ஆகப்பெருந்துயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் இன்றி அமையாது உலகு: வாழ்வின் ஆதாரத்தைப் போற்றுவோம்!

**கடந்த வாரத்தின் தொடர்ச்சி............**

அ.அன்ரன் கமிலஸ்
பொறுப்பதிகாரி
தேசிய சமூக நீர்வழங்கல்

உலக நீர் நெருக்கடிக்கான காரணங்களாக பூகோள வெப்பமயமாதல், அளவுகடந்த நீர்ப் பாவனை, நீர் மாசடைதல், மானுடச்செயற்பாடுகள், வறட்சி மற்றும் சனத்தொகை அதிகரிப்பு ஆகியன முதன்மையானவையாகக் காணப்படுகின்றன. இதன் விளைவாக உற்பத்திகள் பாதிப்பு, வறுமை, உணவுநெருக்கடி, நோய்பாதிப்புகள் போன்றன ஏற்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைகின்றது.

இன்று உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை, பாதுகாப்பான நீரின்றி 8 செக்கனுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாகவும், ஆண்டுதோறும் சராசரியாக எட்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதுகாப்பற்ற நீர் மற்றும் போதிய சுகாதாரம் இன்மையால் ஏற்படும் நோய்களால் இறக்கின்றனர் எனவும் ஐ.நா. அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## உலக நீர் தினம் எப்படி வந்தது?

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. மகாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக மார்ச் 22ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா.பொதுச்சபை பிரகடனம் செய்தது. அன்று தொடக்கம் கடந்த 34 வருடங்களாக ஆண்டுதோறும் விசேட தொனிப்பொருளுடன் இந்தத்தினம் நினைவுகூரப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 'நீர் மற்றும் பாலினம்' எனும் தொனிப்பொருளினை முதன்மைப்படுத்தி நீர் தினம் நினைவுகூரப்படுகிறது. இது பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெறுவதில் உள்ள பால்நிலை சமத்துவமின்மையைக் குறிக்கிறது. உலகளவில் 70 சதவிகிதமான குடும்பங்களில் நீர் சேகரிக்கும் பொறுப்பு பெண்களிடமே உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் தினமும் பல மணிநேரங்களைச் செலவிடுகிறார்கள். இது கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டில் பெண்களின் பங்களிப்பைப் பாதிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாலினச் சமத்துவத்தைக் கருத்திற்கொண்டு நீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தல், பெண்களுக்கான அதிகாரம், அவர்களுக்கான கல்வி மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்தல் வேண்டும். நீர் முகாமைத்துவத்தில் பெண்களின் பங்கை அங்கீகரித்து, அவர்களுக்கான சமமான வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாக அந்தப்பிரதேசத்தில் நிலைத்து நிற்கக்கூடிய குடிநீர் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.



## குடிநீர் வியாபாரம்

இன்றைய காலத்தில் 'சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்' என நகர் முதல் கிராமங்கள் வரை வீதி வீதியாக கூவி விற்பனை செய்கின்ற நவீன வியாபாரப் பொருளாக உள்ள குடிநீரின் நிலைமை பரிதாபத்திற்குரியது. அண்மைக்காலங்களாக நடமாடும் குடிநீர் வியாபாரங்களும், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரும் இன்றியமையாத ஒன்றாக விருந்துகள் முதல் மரணச்சடங்குகள் வரை காணமுடிகின்றது. உண்மையில் இவ்வாறான தண்ணீர் குடிப்பதற்கு நன்றாக இருந்தாலும் அதனால் உண்டாகும் பாதிப்பு பல மடங்கு என உலக சுகாதார அமைப்புகளாலும், நிபுணர்களினாலும் எச்சரிக்கப்பட்டுள்ளது. அதாவது, ரிவர்ஸ் ஒஸ்மோசிஸ் (சுமு) எனப்படும் நீரைத் தொடர்ச்சியாக உட்கொண்டால் கடுமையான பக்க விளைவுகளை உருவாக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. இதன் மூலம் நீரில் உள்ள அனைத்து ஊட்டச்சத்துகளும் நீக்கப்பட்டு குடிநீராகப் பயன்படுத்தப்படுவதனால் உடலுக்குத்தேவையான கனிமங்களை வேறு செயற்கை வழியாகவே பெற்றுக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இருந்தும் நேரடியாகக் குடிநீராகப் பயன்படுத்துவது ஆபத்தானது என இனங்காணப்பட்டுள்ள நீரை சுத்திகரிப்பதற்கு இவ்வாறான சுத்திகரிப்பு முறைமைகள் தற்போதும் அங்கீகரிக்கப்படுகின்றன.



## எரிபொருள் நெருக்கடியிலும் குடிநீர்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் நிலைத்தன்மைக்கும் பல வளங்கள் தேவைப்படுகின்றன. அதில் முக்கியமான இரண்டு வளங்கள் எரிபொருள் மற்றும் குடிநீர். இந்த இரண்டிலும் எது முதன்மை பெறவேண்டும் என்ற கேள்வி பெரும் விவாதத்துக்குரியது.

முதலில், குடிநீர் மனித வாழ்வின் அடிப்படைத் தேவையாகும். தண்ணீர் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. உலகளவில் குடிநீர் ஒரு அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் அது ஆரோக்கியம் சார் பிரச்சினையாகும். விவசாய இழப்புகள் மற்றும் சமூக முரண்பாடுகளுக்கும் அது வழிவகுக்கும்.

மற்றொரு பக்கம், எரிபொருள் ஒரு நாட்டின் பொருளாதார இயந்திரமாகக் கருதப்படுகிறது. எரிபொருள் விலை உயர்ந்தால் பணவீக்கம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைச்செலவு உயர்கிறது.

ஆனால், குறுகிய கால அழுத்தங்களைக் கருத்திற்கொண்டாலும், நீண்ட கால வளர்ச்சியில் குடிநீரே முதன்மை பெறவேண்டும். நீர் வளங்களைப் பாதுகாப்பதும் நீர் சேமிப்புத் திட்டங்களை மேம்படுத்துவது, நீர்மூலங்களை சுத்தமாக வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் நீண்டகாலத் திட்டங்களில் இடம்பெறவேண்டும்.

## குடிநீரும் பிளாஸ்ரிக் ஆபத்துகளும்

குடிநீரில் கலந்துள்ள மைக்ரோ பிளாஸ்ரிக் என்று கூறப்படுகின்ற நுண்மட்ட பிளாஸ்ரிக் கூறுகள் இன்று உலகளவில் பேசுபொருளாக இருக்கும் ஆபத்தான மாசடைதல் பிரச்சினையாகும்.

இதன் தாக்கங்கள் எதிர்காலத்தில்தான் மோசமானதாக இருக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது இவை தொடர்பான ஆய்வுகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டுவருவதனால் அதன் முழுமையான தாக்கங்கள் உறுதிப்படுத்தப் படவில்லை. அத்துடன் நடைமுறையிலுள்ள நீர்ப் பரிசோதனைகளில் கூட இவை மதிப்பிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விழிப்புணர்வு

நீருக்கான தேவை அதிகரித்துச்செல்கின்றது. எனவே அரிதாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையு மென குறிப்பிடப்படுகின்றது. குடிநீரைத் தேடி நாளாந்தம் மைல் கணக்கில் நடக்கும் மக்கள் உலகில் வாழ்கிறார்கள் என்பதை பலர் அறியாதுள்ளனர் என்பதே கவலைக்குரியது. எனவே, நீர் எங்கள் உயிருக்கு நேர் என்று நாம் கருதி செயற்படவேண்டும். ஒவ்வொரு துளி நீரும் பெறுமதி வாய்ந்தது, நீர் இன்றேல் பார் இல்லை என்று நாம் உணர வேண்டும்.

அனைத்து வளங்களுக்கும் தாய்வளம் தண்ணீர். ஊர் வளம் பெற, பார் வளம் பெற நீர் வளம் காப்போம் என திடசங்கற்பம் பூணுவோம் நீரின் அருமையைப் பற்றியும் நீரை சேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றியமையாதது. அத்துடன் குடிநீரின் தரத்தைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

இதன்மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கமுடியும். கொதித்தாறிய நீரைப் பயன்படுத்துதல், நீர் வடிகட்டிகளைப் பயன்படுத்தல், கிணறு மற்றும் நீர்நிலைகளை சுத்தமாக வைத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்தல் முக்கியமானவையாகும்.

இந்தப்புவியிலே முதல் உயிரினம் தோற்றம் பெற்றது நீரில்தான் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விஞ்ஞானக் கோட்பாடாகும். இருந்தும் கால மாற்றத்தின் காரணமாக புவியிலே உயிரினங்கள் வாழ்வதற்கு சவால் ஏற்படுத்துகின்றதும் அதே நீர்தான் என்பது கவலைக்குரியதாகும்.

'இயற்கையினை நாம் பாதுகாத்தால் இயற்கை எம்மைப் பாதுகாக்கும்' என்கின்றனர் சூழலியலாளர்கள். எனவேதான் நிலைத்துநிற்கின்ற அபிவிருத்தியை மேற்கொள்கின்ற ஒரு சமுதாயமாக நாம் மாற்றம் பெறுகின்றபோது இயற்கையின் அருளான நீரை மாசடைவதிலிருந்து பாதுகாத்து சுத்தமற்ற நீரின் மூலம் சுகாதாக் கேடுகளில் இருந்து பாதுகாப்புப் பெறவும், சுத்தமான நீருக்கான போராட்டத்தில் நம்மை நிலைநிறுத்தி, குடிநீர் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான முன்னோடிகளாக எம்மை நாம் மாற்றிக்கொள்ள முயற்சிப்பதன் ஊடாக நீர் வளத்தினைப் பாதுகாக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# புத்தாண்டில் சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம்,ஏப்.15

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதுடன், மக்களும் அதிகளவில் ஆலயங்களில் கூடியிருந்ததை அவதானிக்க முடிந்தது. புத்தாண்டுப் பிறப்பான காலை 8.40 மணிக்கு சிறப்புப்பூசை வழிபாடுகள் ஆரம்பமாகின. மக்கள் எவ்வித ஆரவாரமும் இன்றி அமைதியான முறையில் புத்தாண்டைக் கொண்டாடினர். பொருளாதார நெருக்கடி மற்றும் பொருள்களின் விலையேற்றங்களால் இம்முறை புத்தாண்டு களைகட்டவில்லை. எவ்வித ஆடம்பர நிகழ்வுகளும் நடைபெறவில்லை. மக்கள் ஆலய வழிபாடுகளுடன் வீடுகளில் அமைதியாக புத்தாண்டைக் கொண்டாடினர். (க-17)

SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

PURSUE YOUR MASTER'S DEGREE AT NORTHERN UNI

MSc in Artificial Intelligence
From University of Bedfordshire, UK
Duration - 1 year
University of Bedfordshire

MSc in
Duration - 2 years
SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY
- Artificial Intelligence
- Cyber Security
- Information Technology
- Information Management
- Information Systems
- Enterprise Application Development

Master of Education
Duration- 12 months ( SLQF Level 9 )
Duration- 24 months ( SLQF Level 10 )

Postgraduate Diploma in Education
Duration- 18 months + 3 months research

From Sri Lanka Institute of Information Technology (SLIIT)

021 7534 807
northernuni.lk
admissions@northernuni.com
CONTACT VIA WHATSAPP
077 147 1471

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 07 . 1954



மறைவு
14 . 04 . 2026

(CR/47406) J-1

### சின்னத்துரை சச்சிதானந்தம் (சச்சி பரியாரியார்)

(ஆயுள்வேத வைத்தியர்)

தம்பசிட்டியை பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சச்சிதானந்தம் அவர்கள் நேற்று (14.04.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், விஜயலக்சுமியின் பாசமிகு கணவரும், Dr.பிறேமலக்சுமி, லோகேஸ்வரி, சிறிகாந்தன், பாமினி, இந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேந்திரன், முருகுப்பிள்ளை, கௌதமி, சபேசன், மணிவண்ணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரித்திஷன், டிலன், மீரா, சஞ்சய், அர்ஜுன், சஷ்னி, தியா, சுஜிபிரகாஷ், ஸோபியா, இடக்ஷியன், ரேமியா, நிராஜ், கவிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும், கருணாகரன், கருணேஸ்வரி, இந்திராணி, காலஞ்சென்ற சர்வானந்தம் மற்றும் சதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2026) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 09.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்: குடும்பத்தினர்
அல்வாய் கிழக்கு
077 458 3423

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 03 . 1946



மறைவு
14 . 04 . 2026

### பொன்னையா விக்கினேஸ்வரன்

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும், இராஜவீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா விக்கினேஸ்வரன் நேற்று (14.04.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா, தெய்வானைப்பிள்ளை (சீதைப்பிள்ளை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், கல்வியங்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் நேசம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சர்மிளா, விகிந்தன் (France), அமரர் ஜனார்த்தனன், சுரேந்தன் (France), வினோத், இந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஞ்சினிதேவி (France), கனமொழி (France), சோபனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யதுர்ஷன், மதுர்ஷன், அனுர்ஷன், யதுர்ஷிகா, நாமதி, அனிஸ், அயானா, அனிகா, அவினாஷ், டயேனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, மகேஸ்வரி, அமுதமலர், இராஜேஸ்வரி, அற்புதராசா, தருமலிங்கம் மற்றும் துரைராசா, துதிமலர், இந்திரதாஸ், காசிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2026) புதன்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராசேந்திரம் பண்ணை,
இராஜ வீதி, கோப்பாய்
தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 2179 428 - மகன்
077 5830 597 - மனைவி

(CR 47407)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னை - குஜராத் போட்டியில் மாற்றம்!

ஐ.பி.எல். தொடரில் வரும் 26ஆம் திகதி நடைபெறவிருந்த குஜராத் சென்னை அணிகளுக்கு இடையிலான போட்டி இடம் மாற்றப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் வரும் 26ஆம் திகதி நடைபெறவிருந்த குஜராத் சென்னை அணிகளுக்கு இடையிலான போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் மோதும் வகையில் அட்டவணை வெளியிடப்பட்டு இருந்தது. இந்நிலையில் இதில் தற்போது பிசிசிஐ மாற்றம் செய்துள்ளது. இதன்படி இந்த ஆட்டம் அதேநாளில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 26ஆம் திகதி அகமதாபாத்தில் மாநகராட்சித் தேர்தல் நடைபெறுகிறது. இதை கருத்தில் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம)





# கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை முன்னேற்றம்!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் 32 ஓட்டங்களால் கொல்கத்தாவைத் தோற்கடித்தது சென்னை.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸுக்கு, அணித்தலைவரும் ஆரம்ப வீரருமான கெய்க்வாட் நேற்றும் ஏமாற்றினார். 7 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தாலும், சஞ்சு சாம்சன் மற்றும் மாத்ரே இருவரும் இணைந்து இன்னிங்ஸை மிகச்சிறப்பாகக் கட்டமைத்தனர். 6 ஓவர்களில் அணி 72 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மாத்ரே. சாம்சனின் இன்னிங்ஸ் 48 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்தது. பிரேவிஸ் 41 ஓட்டங்களைச் சேர்க்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கார்த்திக் தியாகி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரரான பின் அலன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். சுனில் நரைன், ரகானே, ரகுவன்சி முறையே 24, 28, 27 ஓட்டங்களைப் பெற்றாலும், அதிரடி என்பது அவர்களின் இன்னிங்ஸின் இருக்கவில்லை. மாறாக நெருக்கடியே அதிகரித்தது. கொல்கத்தாவின் தடுமாற்றம் தொடர அந்த அணியால் 160 ஓட்டங்களையே பெற முடிந்தது. முடிவில் 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

(ம)

# கெய்க்வாட்டுக்கு தண்டம் விதிப்பு!

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் கெய்க்வாட்டுக்கு இந்திய மதிப்பில் 12 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை டெல்லி அணிகளுக்கு இடையில் சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் சென்னை அணி பந்துவீசி முடிக்கவில்லை. இதற்காகவே அணியின் தலைவர் என்ற முறையில் கெய்க்வாட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# சொல்லியடித்த கில்லி

அதிரடிவீரர் சூரியவன்ஸியை முதலாவது பந்திலேயே வீழ்த்துவேன் என்று சக வீரர்களிடம் ஏற்கனவே கூறியிருந்தேன் என பிரபுல் பிரகாஷ் ஹிஞ்ச் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் தொடர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் ராஜஸ்தான் வீரர் சூரியவன்ஸியை, ஹைதராபாத் வீரர் பிரபுல் பிரகாஷ் ஹிஞ்ச் இலகுவாக வீழ்த்தினார். இதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

முதலாவது போட்டியில் ஆட்டநாயகன் விருது கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. சூரியவன்சியை வீழ்த்துவதற்கு அணியில் பெரும் திட்டங்கள் இருந்தன. ஆனால், முதலாவது பந்தில் அவரை வீழ்த்துவேன் என்று நான் கூறியிருந்தேன். அதைச் செயலில் காட்டியுள்ளேன் - என்றார். (ம)

# பந்துவீச்சாளர்களை பார்ப்பதே கிடையாது

## சூரியவன்ஸி வெளிப்படை



நான் பந்துவீச்சாளர்களை பார்த்து விளையாடுவது இல்லை, மட்டைக்கு வரும் பந்துகளை மட்டுமே கவனித்து விளையாடுகிறேன் என ராஜஸ்தான் அணியின் 15 வயதான அதிரடி வீரர் வைபவ் சூர்யவன்ஷி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயிற்சியில் நான் என்ன செய்கிறேனோ அதையே போட்டியின் போதும் செய்ய முயற்சிக்கிறேன். தேவையில்லாமல் எதையும் கூடுதலாகச் செய்யாமல், எனது இயல்பான ஆட்டத்தை நம்பி விளையாடுகிறேன். புவனேஷ்வர் குமார், ஜஸ்பிரீத் பும்ரா, ஜோஷ் ஹேசில்வுட் என யார் பந்து வீசுகிறார்கள் என்பது மனதின் ஒரு ஓரத்தில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நான் பந்து வீச்சாளரைப் பார்க்காமல், வரும் பந்தை மட்டும் பார்த்து விளையாட முயற்சிக்கிறேன் - என்றார். (ம)





## பெங்களூர் வீரர்

# ரிம் டேவிட்டுக்கு அபராதம் விதிப்பு

ஐ.பி.எல். தொடரில் நன்னடத்தை மீறலில் ஈடுபட்ட குற்றத்துக்காக பெங்களூர் வீரர் ரிம் டேவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பை பெங்களூர் அணிகள் மோதின.

இதன்போது 17.2 ஆவது ஓவரில் பந்து மாற்றப்பட்டது. அந்தப் பந்தை பெற்றுக்கொண்ட ரிம் டேவிட் அதைத் திருப்பிக் கொடுக்க மறுத்தார். 19.2ஆவது ஓவரிலும் இதை அவர் மீண்டும் செய்தார். இதையடுத்தே அந்தப் போட்டிக்குரிய கட்டணத்தில் 25 வீதம் அவருக்கு அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.வின் துரோகத்தை தமிழினம் மறக்காது!

## சீமான் விளாசல்



சென்னை, ஏப். 15

தி.மு.க.வும், காங்கிரஸும் செய்த துரோகங்களை தமிழக மக்கள் எந்தக் காலத்திலும் மன்னிக்க மாட்டார்கள் என்று 'நாம் தமிழர்' கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் சீமான் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதற்குக் காங்கிரஸே பிரதான காரணம். காங்கிரஸின் கொடூரங்களுக்கு தி.மு.க. துணை நின்றது. காங்கிரஸும், தி.மு.க.வும் இணைந்தே கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தன. தமிழக மீனவர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு இதுவே காரணம் என்றும் சீமான் தெரிவித்துள்ளார்.

இலவசங்களை அறிவித்து வாக்குகளைப் பெறும் கலாச்சாரத்தை நான் வெறுக்கின்றேன். அந்த அரசியலை முற்றாக அழிப்பதே எனது நோக்கம். நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தால், அனைத்து இலவசத் திட்டங்களும் நீக்கப்படும். அதற்குப் பதிலாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவோம் - என்றார். (ம)





பேராசிரியர் பாலசுகுமாரின் எட்டு நூல்களின் அறிமுகமும், வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு திருகோணமலை தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கலாபூசணம் திருமலை நவம் தலைமையில் இடம்பெற்றது. (ம)

# அரச இழப்பீட்டில் கட்டிய வீட்டில் புத்தாண்டு கொண்டாடிய அநுர

கொழும்பு, ஏப்.15

டித்வா புயலால் சேதமடைந்து, அநுராதபுரம் கல்நேவ பிரதேச செயலகப் பிரிவின் மல்பெலிகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் ஒருவரின் புதிய வீட்டுக்குள் குடிபுகும் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றுக் கலந்துகொண்டார்.

முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் கீழ் ஐந்து மாத காலப்பகுதியில் இந்த வீடு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கல்நேவ பிரதேச செயலகப் பிரிவில் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்காக நிர்மாணிக்கப்படும் ஆறு புதிய வீடுகளில் இதுவும் ஒன்றாகும்.

பிரதேச மக்களுடன் இணைந்து புதிய வீட்டில் புத்தாண்டு சடங்குகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, அங்கிருந்த அனைவருக்கும் தனது புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஜனாதிபதியை அன்புடன் வரவேற்ற பிரதேச மக்கள், அவருக்கும் தமது புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்வில் அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (எ-இ)



## அரசாங்கத்தை...

திசைகாட்டி அரசாங்கத்துக்கு எதிராக அண்மைக்காலமாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் மற்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தொடர்பில் பிரதமர் ஹரிணி மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் மிகவும் வலுவான முறையில், அனைத்துச் சவால்களையும் வெற்றிகொண்டு பயணித்து வருகின்றது. மக்களின் பெரும் எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிரணிகள் பல்வேறு சதிகளில் ஈடுபட்டு வருகின்றன. எதிரணிகளின் தனிப்பட்ட அரசியல் ஆதாயத்துக்காக எமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிப்பார்கள்.

எமக்கு எதிராக எத்தனை பிரேரணைகள் வந்தாலும் அவை அனைத்தையும் நாங்கள் தவிடுபொடியாக மாற்றுவோம். திட்டமிடப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட பொய்யான பரப்புரைகளால் வீழ்ந்துவிடும் நிலையில் தற்போதைய அரசாங்கம் இல்லை. எதிர்க்கட்சிகள் எத்தனை தடைகளை ஏற்படுத்தினாலும், அரசு முன்னெடுத்துள்ள ஊழல் ஒழிப்பு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எந்தத் தொய்வும் இல்லாமல் தொடரும் - என்றார். (அ-ம)

## அல்லைப்பிட்டியில்...

பட்டுள்ளது. பொதுமகன் ஒருவர் குறித்த என்புத் தொகுதியை அவதானித்து அது தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார், என்புத் தொகுதியை அடையாளப்படுத்தி மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை மீட்டனர்.

நான்கு அல்லது ஆறு மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நபரின் என்புத் தொகுதியே இவ்வாறு மீட்கப்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், மேலதிக ஆய்வின் பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பில் உறுதிபடக் கூறமுடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம-66)

## தேரேறி...

காலை 6 மணியளவில் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகின. காலை 10 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் சித்திரத் தேரில் விநாயகப் பெருமான் வீதி வலம் வந்தார்.

மாலை 3 மணியளவில் சித்திரத் தேரிலிருந்து விநாயகப் பெருமான் பச்சை சாத்தி அவரோகணம் செய்யும் திருக்காட்சி இடம்பெற்றது. (அ-ம-66)

## வட...

மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் மின்னல் தாக்கம் அச்சப்படும் வகையில் இருக்கும் அத்துடன் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கும் சாத்தியங்கள் உள்ளன. எனவே, இந்தக் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## புத்தாண்டு...

விபத்துகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. அண்மைய நாள்களில் ஏற்பட்ட விபத்துகள் காரணமாக 29 ஆயிரம் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 13 லட்சம் பேர் விபத்துகளால் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். கணிசமான அசம்பாவிதங்கள் புத்தாண்டுக் காலத்திலேயே நிகழ்கின்றன - என்றார். (அ-ம)

## 24 மணி...

இருந்து, 179 கிராம் ஹெரோய்ன், 228 கிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், கைதானவர்களில் ஆறு பேரின் சட்டவிரோத சொத்துகள் தொடர்பில் விசாரணை ஆரம்பமாகியுள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-ம)

## யாழ்...

இந்திய இராணுவம் புரிந்த அடக்குமுறைக்கு எதிராக, அன்னை பூபதி 31 நாள்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்தார். அவரின் அஞ்சலிப்பு நிகழ்வுகள் தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நேற்றையதினம் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-66-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானைத் தொடர்ந்து கியூபாவே இலக்காம்

## ட்ரம்ப் மிரட்டல்

**வொஷிங்டன், ஏப். 15**

**ஈரானுக்கு எதிரான போரைத் தொடர்ந்து, அமெரிக்கா கியூபாவை ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்புக்கள் மிகவும் அதிகம் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

மத்திய கிழக்கில் அமெரிக்கா முன்னெடுத்துவரும் இராணுவ நடவடிக்கை தொடர்பில் அதிபர் ட்ரம்ப் இன்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்த பின்னர், அமெரிக்கா கியூபாவை ஆக்கிரமிப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


கியூபா பல ஆண்டுகளாக மிகவும் மோசமான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. கியூப அமெரிக்கர்களின் குடும்ப உறுப்பினர்கள் அங்கு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின்சொத்துகள்சூறையாடப்பட்டுள்ளன. கியூபாவில் மேலும் பல மோசமான விடயங்கள் நடந்தன. இவை அனைத்துக்குமாக அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார்.


ட்ரம்பின் கருத்தை, கியூப அதிபர் மிகுவல் தியாஸ் கடுமையாகக் கண்டித்துள்ளார். கியூபா தொடர்பில் ட்ரம்ப் கூறியுள்ள கருத்துக்கள் எவ்வித அடிப்படையும் அற்றவை. அவர்கள் எம்மீது கைவைத்தால் கடும் எதிர்ப்பைச் சந்திப்பார்கள். அத்துடன் எமது தேசத்துக்காகப் போராடி உயிர்துறக்கவும் நாம் தயார் என்று கியூப அதிபர் மிகுவல் தியாஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 15

நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா நேற்றுமுந்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 19 தினங்கள் காலை, இரவு உற்சவங்களாக ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழா இடம்பெறும். (ம-66)





வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் உடனுறை நகுலாம்பிகாதேவி ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது நகுலாம்பிகாதேவி சிறிய தேரில் அடியவர்கள் புடைசூழ உள்வீதி உலா வந்தார். (எ-41-66-17)


# வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

**துப்புரவு பணியாளர்**
**(ஆண், பெண் இருபாலாரும்)**

ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்



### கனகசபை அருணகிரிநாதன்

**மலர்வு: 13.11.1938 உதிர்வு: 14.04.2026**

யாழ் வட்டுக்கோட்டை கிழக்கு, தாவளை வீதியை பிறப்பிடமாகவும் மலேசியா மற்றும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை அருணகிரிநாதன் அவர்கள் நேற்று (14.04.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை, சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அருளானந்தம், காலஞ்சென்ற அம்பிகை, இராமநாதன், காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் ஆறுமுகநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (15.04.2026) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஈசன் மலர்ச்சாலை, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பின்னர் பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை.**
**விஷ்வாஹரன் - 0779601795**
**முரளிதரன் - 0777809664**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

CS 31603)A

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
16
04
1946



**மறைவு**
14
04
2026

### கந்தசாமி நவமணி

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நவமணி அவர்கள் நேற்று (14.04.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - தெய்வானை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், சிறிஸ்கந்தன், அம்பிகா, நவநீதன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், நவநீதன் லஜிதாவின் மாமியும், பராபரன், ராகவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2026) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து பூதவுடல் தகனக்கிரியைக்காக காளையன் மொண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**Tel:077 31 44 951**
**077 28 40 267**
**077 68 51 227**

(CS 31601)A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்15.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.